# CSR Nutritional Health Mix Distribution

# 09.06.21

### ஊனமுற்றோருக்கான தேசிய நிறுவனத்தில்

## மாற்றுத் திறனாளிகளுக்கு ஊட்டச்சத்து பொருட்கள்

**கேளம்பாக்கம்**

கோவளத்தை அடுத்த முட்டுக்காடு பகுதியில் ஒன்றுக்கும் மேற்பட்ட ஊனமுற்றோரின் மேம்பாட்டுக்கான தேசிய நிறுவனத்தில், சமூக பொறுப்புணர்வு திட்டத்தின் கீழ் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் பல்வேறு உதவிகளை செய்து வருகின்றன.

இதன்பேரில், சென்னையைச் சேர்ந்த மொபீஸ் இந்தியா பவுண்டேஷன் என்ற அமைப்பின் சார்பில், சமூக பொறுப்புணர்வு திட்டத்தின் கீழ் பல்வேறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாதிரி சிறப்பு பள்ளியில் பயிலும் வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு, ரூ.5 லட்சம் மதிப்பில் உடல் ஆரோக்கியத்துக்கான ஊட்டச்சத்து பொருட்களை, அந் நிறுவனத்தின் தலைவர் பிரேம் சாய் மற்றும் மேலாளர் தினகரன் ஆகியோர் தேசிய நிறுவன இயக்குநர் நசிகேதாவிடம் வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில், துணை பதிவாளர் சங்கர நாராயணன் மற்றும் வழக்கறிஞர் அபிநயா கலந்து கொண்டனர்.

**Hindu 11.06.2021**



சமூக பொறுப்புணர்வு திட்டத்தின் கீழ் மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய நிறுவனத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு ஊட்டச்சத்து பொருட்கள் வழங்கப்பட்டபோது எடுத்தபடம்.

**Maalai Murasu 12.06.2021**

## முட்டுக்காடு

# மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய நிறுவனத்தில் ஊட்டச்சத்து பொருட்கள் வழங்கும் விழா



சென்னை, ஜுன்.10–

முட்டுக்காட்டில் இயங்கி வரும் ஒன்றுக்கும்மேற்பட்ட ஊனமுற்றோரின் மேம்பாட்டிற்கான தேசிய நிறுவனத்தில் சமூக பொறுப்புணர்வு திட்டத்தின் கீழ் பல தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் பல்வேறு உதவிகளை செய்து வருகிறது.

இதன் ஒருபகுதியாக சென்னையில் உள்ள மொபீஸ் இந்தியா பௌன்டேஷன் என்ற அமைப்பு நிப்மேட்டில் இயங்கும் பல்வகை மாற்றுத்திறனாளிகளுக்கான மாதிரி சிறப்பு பள்ளியில் பயிலும் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு உதவும் வகையில் ரூபாய் 5 லட்சம் மதிப்பிலான உடல் ஆரோக்கியத்துக்கான ஊட்டச்சத்து பொருட்களை தனியார் நிறுவங்களின் சமூக பொறுப்புணர்வு திட்டத்தின் கீழ் மொபீஸ் இந்தியா பௌன்டேஷன் நிறுவனத்தின் பிரேம் சாய் (தலைவர்) மற்றும் தினகரன் (மேலாளர்), ஆகியோர் நசிகேதா ரௌட், இயக்குனர் நிப்மேட் வழங்கினர்.

மேலும் இந்த விழாவில் எஸ்..சங்கர நாராயணன், துணை பதிவாளர் (நிர்வாகம்), நிப்மேட் எஸ்.எம். அபிநயா, மூத்த வழக்கறிஞர் (சென்னை உயர் நீதிமன்றம்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

Maalai News 10.06.2021